# 9 நிலைவாழ்வு

**இயேசு பல துன்பங்களை அனுபவித்து சிலுவையில் அறையப்பட்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். அவரது உயிர்ப்புக்கு பலர் சான்று பகர்ந்தனர் என முன்னைய பாடத்தில் கற்றோம்.**

**அவரின் உயிர்ப்பு, உயிர்ப்பால் உரித்தான நிலைவாழ்வு, அதற்காக நாம் செயற்பட வேண்டிய முறைகளை இப்பாடத்தில் கற்போம்.**

ஞாயிறு வழிபாட்டின் பின்னர் வனஜா, பிரவீன், சரோஜா மூவரும் பெற்றோருடன் வீடு திரும்பினர். தாத்தாவும் பாட்டியும் வீட்டுக்கு வருவதைக் கண்டு மகிழ்வடைந்த அவர்கள் முற்றத்திற்கு சென்று வழக்கப்படி கதை கேட்க ஆயத்தமாகினர்.

வனஜா : தாத்தா! 'பாவம்' என்றால் என்ன?

தாத்தா : இறை விருப்பத்தை மீறி செயற்படுதலே பாவம் ஆகும். இதனால் எமக்கும் இறைவனுக்கும் இடையிலான தூரம் அதிகரிக்கின்றது.

பிரவீன் : தாத்தா! இறையுறவை நிரந்தரமாக்கும் வழிமுறைகள் திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளனவா?

தாத்தா : ஆம்! மகனே நாம் இறைவனுக்கு கீழ்படிந்து வாழ வேண்டும். இறைகட்டளைகளை நிறைவேற்ற வேண்டும். இறைவிருப்பத்தை அறிந்து வாழ தினமும் திருவிவிலியத்தை வாசிக்க வேண்டும்.

வனஜா : முற்காலத்தில் யூதமக்கள் இறைவனுக்கு கீழ்படியாது இறைகட்டளைகளை மீறி பாவம் செய்தனர். பாவத்திலிருந்து விடுதலை பெற்று மீண்டும்

இறை உறவை ஏற்படுத்த பலிகள் ஒப்புக் கொடுத்தனர். அவர்கள் ஆட்டுக்குட்டிகளை பலி செலுத்துவது வழக்கம். ஆட்டுக்குட்டியின் இரத்தம் அவர்களது பாவங்களை கழுவுகின்றது என்பது அவர்களது நம்பிக்கையாக இருந்தது.

ஆனால், ஆண்டவர் இயேசு எம்மில் அன்பு கூர்ந்து, உடைந்துபோன மனித இறை உறவை கட்டியெழுப்பி, பாவத்திலிருந்து விடுதலை தரும் ஆட்டுக்குட்டியானார். இயேசு எமது பாவங்களுக்காக சிலுவையில் இரத்தம் சிந்தினார். எமது பாவங்களுக்கு மன்னிப்பு கிடைத்தது. இதனால் பாவத்தால் உடைந்த உறவு மீண்டும் புதுப்பிக்கப்பட்டது.

பிரவீன் : ஆம்! இயேசு எமக்காக மரித்து பாவச்சுவரை அகற்றி எமக்கு விடுதலை தந்தார். இயேசு, ஏன் துன்பங்களை அனுபவித்து மரித்தார் என்பதை நான் நன்கு புரிந்துகொண்டேன்.

சரோஜா : இயேசுவின் சிலுவை மரணத்தால் மன்னிப்பு கிடைத்தது போன்று நிலைவாழ்வின் உரிமையையும் நாம் பெற்றுள்ளோம் என இன்று அருளுரையில் கேட்டோம். அது உண்மையா? தாத்தா!

தாத்தா : ஆம், மகளே!
இயேசு மரணத்திலிருந்து உயிர்ப்பு அடைந்த நாளை கிறிஸ்தவர்கள் ‘ஈஸ்டர்’ அல்லது ‘பாஸ்கா ’என அழைக்கின்றனர். இது நிலைவாழ்வுக்குள் நாம் பிரவேசிக்கும் வழியை திறந்துள்ளது.

வனஜா : தாத்தா!
நிலைவாழ்வைப் பெற நாம் என்ன செய்ய வேண்டும் என இயேசு எமக்கு கற்று தந்துள்ளார் அல்லவா?

தாத்தா : ஆம், மகளே!
திருவிவிலியத்தில் இது குறித்து குறிப்பிடப் பட்டுள்ளது. ''மறுபடியும் பிறந்தாலன்றி எவரும் இறையாட்சியைக் காண இயலாது என மிக உறுதியாக உமக்குச் சொல்லுகிறேன்'' யோவான் 3:3 நாம் எமது தவறுகளை திருத்தி பாவத்திலிருந்து விடுபட்டு புது வாழ்வு அடைய வேண்டும் என்ற உண்மை இதிலிருந்து வெளிப் படுகின்றது.

பிரவீன் : தாத்தா!
நிலைவாழ்வை உரிமையாக்க இயேசு எமக்கு காட்டிய முன்மாதிரிகள் யாவை?

தாத்தா : ஆம், மகனே!
''உமக்குள்ள யாவற்றையும் விற்று ஏழைகளுக்கு கொடும். பின்பு வந்து என்னை பின்பற்றும்'' என இயேசு கூறினார். லூக்கா 18:18-23 இதிலிருந்து எமக்கு உரித்தான வளங்களை எமக்கு மட்டுமல்ல பிறர் நலனுக்காக பயன்படுத்த வேண்டும். முழு மனதுடன் பிறருக்கு உதவி செய்ய வேண்டும். அவை அறிவு, ஆற்றல், காலம் தொடர்பான உதவிகளாக அமையலாம். அதேபோன்று அன்பு, ஏற்றுக் கொள்ளல், இனிய சொற்கள், புரிந்து கொள்ளல், நோயாளர், விதவை, பாவிகளில் கருணை போன்ற இயேசுவின் முன்மாதிரிகளை பின்பற்றி, நிலைவாழ்வுக்கு நாமும் உரித்துடைய வர்களாகலாம்.

## நினைவிற் கொள்வோம்

இயேசு எமது பாவங்களுக்காக சிலுவையில் தனது வாழ்வை அர்ப்பணித்தார்.

அதனால் எமது வாழ்வை மாற்றி அமைத்து பாவத்திலிருந்து விடுபட்டு வாழுதல் கிறிஸ்தவர்களாகிய எமது பொறுப்பாகும்.

நாம் எப்போதும் பிறருக்கு உதவி செய்ய ஆயத்தமாக இருக்க வேண்டும்

எமது வளங்களை மட்டுமல்ல எமது ஆற்றல், காலம், இனிய சொற்கள் போன்றவற்றை பிறருடன் பகிர வேண்டும்.

கிறிஸ்தவராகிய எமது ஒரே எதிர்பார்ப்பான நிலை வாழ்வைப் பெற்றுக்கொள்ள இயேசுவைப் பின்பற்றுகின்றவர்களாக அர்ப்பணிப்புடன் செயல்படுவோம்.

மனனவசனம்:
உரோமையர் 12:2

இந்த உலகத்தின் போக்கின்படி ஒழுகாதிர்கள். மாறாக உங்கள் உள்ளம் புதுப்பிக்கப் பெற்று மாற்றம் அடைவதாக! அப்போது கடவுளின் திருவுளம் எது எனத் தேர்ந்து தெளிவீர்கள். எது நல்லது எது உகந்தது எது நிறைவானது என்பதும் உங்களுக்குத் தெளிவாகத் தெரியும்.
உரோமையர் 12 : 2

செயற்பாடு

1. கிறிஸ்தவருக்கு உரித்தான நிலைவாழ்வை உரிமையாக்க உங்களது வாழ்வில் காணப்படவேண்டிய நற்பண்புகள் ஐந்தைக் குறிப்பிடுக.

2. உங்கள் பாவங்களுக்காக இறைவனிடம் மன்னிப்பு வேண்டி விண்ணப்பம் எழுதுக.